# 19 முப்பொருள்கள்

உலகத்துப் பொருள்களொல்லாம் மூன்று பிரிவினுள் அடங்கும். அறிவிக்காமலே அறியும் பொருள். அறிவித்தால் அறிந்தும், அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள். அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் என்பனவே அப்பிரிவுகளாகும். இம்மூன்றையும் சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்று கூறுகின்றது. இம்மூன்றும் என்றுமுள்ள பொருள்கள். இவை வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த தனிப்பொருள்களேயாயினும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவே. பதி வியாபகம்: பசு வியாப்பியம்: பாசம் வியாப்தி, இவ்வகையில் இவை தொடர்புடையன. (பாசம் - கட்டுவது. பசு - கட்டுண்டிருப்பது)

**பதி:** கடவுளுக்கு இருவித நிலைகள் கூறப்படுகின்றன. ஒன்று **சொரூபலட்சணம்** என்னும் சிறப்பியல்பு. இந்நிலையிலிருக்கும் போது கடவுளுக்குப் பெயர், குணம், குறி எதுவுமில்லை. திரிகரணங்களுக்கும் எட்டாத இந்நிலையிலுள்ள இறைவனுக்குப் பரமசிவம் என்று பெயர் கூறப்படும். இவ்வுயர்ந்த நிலையிலுள்ள இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நோக்கில், தானாகவே பல படிகள் இறங்கி வந்து, பல நிலையிலுள்ள கடவுளரை அதிட்டித்து நின்று, அவர்கள் மூலமாக ஐந்தொழில்களைச் செய்தருளுகின்றார். இதுவே, இரண்டாவது நிலையாகும், இது **தடத்தலட்சணம்** எனப்படும் பொது இயல்பு ஆகும். இந்த நிலையில் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானாசக்தி என்பவற்றின் தொடர்பினால் அருட்டிருமேனிகளாகிய அருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி என்பன தோற்றுகின்றன. சிவமும் சக்தியும் மணியும் ஒளியும் போலவும், கனியும் சுவையும் போலவும் பிரிப்பின்றி இருப்பன.

தடத்தநிலையில் சிவபிரான் அளவிலாற்றலுடைமை, இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், இயற்கையுணர்வினனாதல், தன்வயத்தனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, தூயவுடம்பினனாதல், வரம்பிலின்பமுடைமை என்னும் எட்டுக் குணங்களுடையவராகின்றார். ஆன்மாக்களின் துன்பத்தை நீக்கி, இன்பமளிப்பதற்காகவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் என்னும் ஐந்தொழில்கள் செய்யப்படுகின்றன. பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்தும் ஐந்தொழில் புரியும் திருமேனிகளாகும்.

**பசு:** பதியினைப் போலவே ஆன்மாக்களும் அநாதியானவை. எண்ணிக்கையற்றவை. பாசங்களோடு அவை தொடர்புபட்டிருக்குந் தன்மையால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். மூவகையான்மாவும் கொடிய ஆணவத்தோடு அநாதியாகவே கட்டுண்டு வருந்துவன. ஆணவத்தின் வலிமையைக் கெடுத்தற்காக இறைவன் இந்த ஆன்மாக்களுக்கு மாயையினாலாகிய தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்துள்ளான். அவற்றினால் அவை வினைசெய்யும். வினை செய்தலாலும் திருவருட்சக்தி பதிதலினாலும் ஆணவம் வலியிழந்து காணப்படும். அந்நிலையில், ஆன்மாக்கள் இறைவனைச் சேர்ந்து பேரானந்தம் பெறும். ஆன்மா பதியைச் சாரும் போது சத்தாயும், பாசங்களைச் சாரும் போது அசத்தாயும் இருப்பதால் ‘சதசத்து’ எனப்படும்.

**பாசம் :** ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும் பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றுமாகும். ஆன்மாக்களின் சுக துக்கங்களுக்கு இவை முறையே நிமித்த காரணம், முதற் காரணம், துணைக் காரணம் என உள்ளவை. ஆணவமானது, ஆன்மாவின் அறிவை மறைத்து மயக்குதல், பொருள்களை மறைப்பதோடு தன்னையும் மறைத்துக் கொள்ளுதல் முதலான அளவிறந்த ஆற்றலுடையது. இது ஆணவ மலத்தின் இயல்பாகும். ஞானிகளிடத்தில் ஆணவ மலம் வலியிழந்து கிடக்கும். சீவன்முத்தரது உடல் நீங்கும்போது ஆணவ மலமும் அவர்களை விட்டு நீங்கும்.

**கன்மம**ானது நல்வினை, தீவினை என இரண்டாகும். இது மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படும். உயிரோடு தொடர்புடைய வினை **பசுவினை** என்றும் சிவத்தோடு தொடர்புடைய வினை **சிவவினை** என்றும் அவை தனித்தனி இரண்டாகும். பற்றற்ற வினை என்பது பயன் கருதாது செய்யும் செயலாகும். இது நல்வினையிலும் பன்மடங்கு சிறந்தது. நல்வினையாலாவது புண்ணியம்,



இலவச விநியோகத்திற்காக

தீவினையாலாவது பாவம். புண்ணியத்தின் பலன் இன்பம். பாவத்தின் பலன் துன்பம். இன்ப துன்பங்களை அனுபவித்தற்கு ஆன்மா மீண்டும் பிறத்தல் வேண்டும். பற்றற்ற வினைக்கு மோட்சமே பலனாகும். அவ்வினை செய்த ஆன்மா மீண்டும் பிறவி எடுக்காது. ஆன்மாக்கள் செய்த வினைகளின் தொகுதி **சஞ்சிதம்** (சஞ்சிதம் - சேர்க்கப்பட்டது) எனப்படும். இவ்வினைகள் பல பிறவிகளில் சிறிது சிறிதாக அனுபவிக்கப்படுகின்றன. அனுபவிக்கப்படும்போது செய்யப்படும் வினை **பிராரத்தம்** எனப்படும். பழ வினைப்பயனை அனுபவிக்கும்போது ஆன்மா புதிய வினையையும் செய்யும். அது **ஆகாமியம்** என்று பெயர்பெறும். அவற்றின் பயனை அனுபவிக்க ஆன்மா மீண்டும் பிறக்க வேண்டும். பிறவாமை வேண்டுமாயின், ஆன்மா இறைவழிபாட்டில் நின்று பற்றற்ற வினை செய்தல் வேண்டும்.

**மாயை** - மாயை முறையே அசுத்தமாயை, சுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றாகும். மாயையிலிருந்து ஆன்மாக்களுக்கு அவற்றின் வினைக்கேற்ப தனு, கரண, புவன, போகங்கள் உண்டாக்கப்படுகின்றன.

**மறுபிறப்பு**: அளவற்ற ஆன்மாக்கள் பிறந்து இறந்து உழன்று கொண்டே இருக்கின்றன. **"புல்லாகிப் பூடாய் .. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"** என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியவாறு, முத்தியடையும் வரையிலும் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. ஆன்மாவானது அது செய்த வினைக்கேற்றவாறு முன்பெற்ற பிறப்பை அல்லது அதிலும் உயர்ந்த தாழ்ந்த பிறப்புக்களை மீண்டும் பெறுகிறது. மலங்களினின்றும் நீங்கி முத்தியடைய விரும்பும் ஆன்மா, அதற்கேற்ற சைவ சாதனங்களை (சைவ நாற்பாதங்களை)க் கைக்கொண்டொழுகுதல் வேண்டுமென்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

**முத்தி:** முத்தி என்பது விடுதலை எனப் பொருள்படும். சிவனொடு அத்துவிதப்படுதலால் உண்டாகும் ஆனந்தம் சிவானந்தமாகும். முத்தி நிலையில் முப்பொருள் இரண்டற்று நிற்றலுக்குச் சித்தாந்தசாத்திரங்கள் தாடலை போற் கூடல் எனக் குறிப்பிடும். தாள், தலை என்னும் இருவேறு சொற்கள் சேரும்போது, இரண்டாகும் தன்மையற்று, தாடலை என்றாகும். இங்கு கலப்பினால் ஒன்றாகியும் பொருண்மையால் இரண்டாகியும் நின்றவாறு சிவனும் சீவனும் பிரிப்பின்றி ஒன்றாகியும் இரண்டாகியும் நிற்கும். முத்தியடைந்த ஆன்மாக்களை சிவத்தினது அனுபவத்தைப் பெறும்.

### 01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. முப்பொருட்களும் எவை?
2. கடவுளுக்குரிய இருவித நிலைகளும் யாவை?
3. உயிர் ஏன் சதசத்து எனப்படுகிறது?

### செயற்பாடு

1. பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்கும் திருவருட்பயன் பாடல்களைத் தேடித் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் சைவசித்தாந்தம் முப்பொருள்கள் எனக் குறிப்பிடும்.
- சொரூபலட்சணம், தடத்த லட்சணம் என்பன கடவுளுக்குரிய இருவித நிலைகள் ஆகும்.
- அருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி என்பன கடவுளின் மூன்று வகைத் திருமேனிகளாகும்.
- பசு பாசங்களோடு தொடர்புபட்டிருக்குந் தன்மையால் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும்.


இலவச விநியோகத்திற்காக